මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.:
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: **2017.04.27**

**அரச கணக்குகள் சுற்றுநிருப இல. 255/2017**

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்

**<u>வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்ளுதல்</u>**

2017 ஆம் ஆண்டின் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் அவற்றுக்குப் பின்னரான சட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளை ஆகக் கூடியதாகப் பயன்படுத்துவனை உறுதிப்படுத்துவதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டு வரையறைகளை விஞ்சுகின்ற அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புக்களை மேற்கொள்வதனை தடுப்பதற்கும் இச்சுற்றுநிருபம் வெளியிடப்படுகிறது.

02. இதற்கமைவாக, வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தி செலவினங்களை மேற்கொள்கின்ற போது பின்வரும் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

அ. வருடாந்த வரவு செலவுத்திட்ட வரையறைக்குள் ஆள்சார் வேதனாதிகள் நீங்களாக ஏனைய கொடுப்பனவுகளுக்காக ஆரம்பத்தில் அர்ப்பணிப்புகள் இனங்காணப்படுதல் வேண்டும்.

ஆ. அத்தகைய இனங்காணப்பட்ட அர்ப்பணிப்புகளின் அடிப்படையில், தொடர்புடைய பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றதன் பின்னர் அதற்கான தொகையும் உடன்பட்ட ஒப்பந்தங்களுக்கு அமைவாக சான்றுப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதியும் பொறுப்புடமையாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

இ. நிதி வருடமொன்றுக்கு அதிகமாக பொருட்கள், சேவைகள் மற்றும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அர்ப்பணிப்புகளில் ஈடுபடுகின்ற பொழுது அல்லது ஒப்பந்த வருடமொன்றில் அத்தகைய அர்ப்பணிப்புகளுக்காக பொருட்கள் மற்றும் சேவைகள் பெறப்படாத பொழுது அல்லது ஒப்பந்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆனால் சான்றுப்படுத்தப்படாத போது, அத்தகைய அர்ப்பணிப்புகள் வருமான வருடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கு தேவையான சந்தர்ப்பத்தில் மாத்திரம் அடுத்த வருடத்திற்கு கொண்டுவரப்படமுடியும்.

ஈ. குறித்த வருடத்தின் போது கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மூலம் அனைத்துப் பொறுப்புக்களும் விடுவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் பொறுப்பானது குறித்த நிதி ஆண்டில் தீர்க்கும் நோக்கத்துடன் முன்கொண்டு வரப்பட மாட்டாது. இதற்கமைவாக, மேற்குறித்த அறிவுருத்தல்களைப் பின்பற்றாத எந்த ஒரு பொறுப்பினையும் செலுத்துவதற்கு திறைசேரி பொறுப்பேற்கமாட்டாது.

03. மேலே குறித்த அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புக்களை உள்ளடக்கும் வகையில் சிகாஸ் கணக்கீட்டு முறைமை இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தவகையில் மேற்குறித்த தொழிற்பாட்டினை சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்குள் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை நீங்கள் எடுத்தல் வேண்டும்.

04. குறித்த திகதியில் ஒவ்வொரு செலவின தலைப்புக்குமான அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புக்களை இனங்காண்பதற்கான குறிப்பீடு செய்யப்பட்ட தரவு முறைமையொன்றினை அரச கணக்குகள் திணைக்களம் பேணி வருகின்றது என்ற வகையில், அனைத்து செலவின அலகுகளும் இந்த தகவல் முறைமையின் தினசரி இற்றைப்படுத்தலுக்காக www. newcigas.treasury.gov.lk என்ற இணையத் தளத்திற்காக அர்ப்பணிப்புகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை தரவேற்றுதல் (upload) வேண்டும்.

05. இச்சுற்றுநிருபத்தின் நோக்கத்திற்கமைவாக “அர்ப்பணிப்புகள்” மற்றும் “பொறுப்புக்கள்” பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படும்.

**அர்ப்பணிப்புகள்** - **பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் அல்லது வேலை ஒப்பந்தங்களை மேற்கொள்ளுகின்ற நோக்கத்துடன் வெளியாருடன் செய்து கொள்கின்ற பொருட்கள், சேவைகள் மற்றும் பணிகள் தொடர்பான ஒப்பந்தம்/ கட்டளைகளின் பெறுமதி.**

**பொறுப்புக்கள்** - **முறையாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்காகவும் நிறைவு செய்யப்பட்டதாக சான்றுப் படுத்தப்பட்ட ஒப்பந்த வேலைகளுக்காகவும் செலுத்தப்பட வேண்டிய மீதி**

06. இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின் அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பி.குரும்பலப்பிட்டிய அவர்களை (தொலைபேசி இல. 0112484753) தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

**ஒப்பம்/ ஏ.ஆர்.தேசப்பிரிய**
**திறைசேரி பிரதிச் செயலாளர்**

பிரதி : கணக்காய்வாளர் நாயகம்